மழைக்காலம் தொடங்கும் முன்

# காரைக்காலில் 100 குளங்கள் தூர் வார நடவடிக்கை

## கலெக்டர் அறிவிப்பு

காரைக்கால்,ஆக.8:காரைக்காலில் மழைக் காலம் தொடங்கும் முன், சுமார் 100 குளங்கள் தூர்வார நடவடிக்கைஎடுக்கப்பட்டு வருகிறது என, மாவட்ட கலெக்டர்விக்ராந்த்ராஜா அறிவித்துள்ளார்.

காரைக்காலில் ஒவ்வொரு அரசுத்துறையும் மற்றும் கோவில்கள், தனியார் தொழிற்சாலைகள் அந்தந்த பகுதிகளில் உள்ள குளம், வடிகால் வாய்க்கால்களை தூர் வாரி மரக்கன்றுகள் நட்டு பராமரிக்க வேண்டும். என, மாவட்ட கலெக்டர் விக்ராந்த்ராஜா அண்மையில் அறிவுறுத்தியிருந்தார்.

அதன்பேரில், காரைக்காலில் ஏராளமான பகுதிகளில் குளங்கள், வடிகால் வாய்க்கால்கள் தூரவரப்பட் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, கோட்டுச்சேரி பிடாரி அம்மன் கோயில் குளம் தூர்வாரும் பணி கடந்த சில நாட்களுக்கு முன் தொடங்கியது. நேற்று இப்பணி நிறைவு பெற்றதை அடுத்து குளத்தின் கரையில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர்விக்ராந்த்ராஜா கலந்துகொண்டு மரக்கன்றுகளை நட்டு பேசியதாவது:

காரைக்கால் மாவட்டம் முழுவதும் ஒவ்வொரு அரசுத்துறையும்,தனியார் தொழிற்சாலைகளும், பொதுமக்களும் ஒன்று சேர்ந்து, தங்கள் பகுதியில் உள்ள குளம், வடிகால் வாய்க்கால்களை தூர் வாரி மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கவேண்டும்என வேண்டுகோள் விடப்பட்டிருந்தது. அதற்கு இணங்க இதுவரை 25 குளங்கள்தூர் வாரப்பட்டுமரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது.

மேலும், மழைக்காலம் தொடங்கும் முன், மாவட்டம் முழுவதும் சுமார் 100 குளங்களைதூர்வாரி, மரக்கன்றுகள் நட மாவட்ட நிர்வாகம்முடிவுசெய்துள்ளது. இதற்கு பொதுமக்களும் தங்களது ஒத்துழைப்பை வழங்கவேண்டும். மேலும் தூர்வாரப்பட்ட குளங்களில்குப்பைகள், கழிவுநீரை எக்காரணம் கொண்டும் கொண்டு சென்று சேர்க்க கூடாது என்றார். நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் சுரேஷ் மற்றும் ஏராளமான அரசு துறை அதிகாரிகள்பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



காரைக்கால் மாவட்ட பொதுப்பணித்துறை சார்பில் பிடாரி அம்மன் கோயில் குளம் தூர்வாரப்பட்டு அங்கு மரக்கன்றுகள் நடும் பணியை கலெக்டர் விக்ராந்த்ராஜா தொடங்கி வைத்தார்.